# இளந்தாரகை

Young Star Sports Club
Seelamunai, Batticaloa

சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தச் செய்திமடல்

தாரகை – 01 டிசம்பர் 2007


# மட்டுநகரிற்கு பெருமைசேர்த்த சீலாமுனையின் இளந்தாரகைகள்


அம்பாறை மாவட்ட காற்பந்தாட்டச் சங்கம், கல்முனை சனிமவுண்ட் விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் நடாத்திய மர்ஹூம் M.I.M. இக்பால் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் மட்டுநகர் சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக் கழகம் சாம்பியனாக வெற்றிவாகை சூடிக் கொண்டுள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த முன்னணிக் காற்பந்தாட்டக் கழகங்கள் பங்குபற்றிய நொக்கவுட் முறையிலான இந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் கடந்த 09.11.2007ம் திகதி தொடக்கம் 15.12.2007ம் திகதி வரை கோலாகலமான ஏற்பாடுகளுடன் இடம் பெற்றது.

இச்சுற்றுப் போட்டியில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பங்குபற்றிய காற்பந்தாட்டக் கழகங்களுள் ஒன்றாகிய சீலாமுனை 'யங்ஸ்டார்' விளையாட்டுக் கழகத்தினர் முதலாவது சுற்றில், கடந்த 11.11.2007ம் திகதி சாய்ந்தமருது 'பிளையிங்கோர்ஸஸ்' விளையாட்டுக் கழகத்தினரை எதிர்த்தாடி 10:02 என்ற கோல் கணக்கில் இலகுவான வெற்றியினைப் பெற்றுக்கொண்டார்கள்.

அடுத்து இரண்டாவது சுற்று காலிறுதிப் போட்டியாக அமைந்தது. இப்போட்டியில் மருதமுனையின் பலம்வாய்ந்த அணிகளுள் ஒன்றான 'ஒலிம்பிக்ஸ்' அணியை 19.11.2007ம் திகதி சந்திக்க நேரிட்டது.





மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற இக்காலிறுதிப் போட்டியில் சீலாமுனை யங்ஸ்டார் அணியினர் 1:0 எனும் கோல் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார்கள்.

அரையிறுதியில் மருதமுனையின் மற்றுமொரு பலம்பொருந்திய 'கோல்ட் மைண்ட்' அணியைச் சந்திக்க நேரிட்டது. 23.11.2007ம் திகதி நடைபெற்ற இப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமைந்தது, இதில் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் போட்டி நிறைவுபெற்றதும், வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக பெனால்ட்டி முறையிலான போட்டி இடம் பெற்றது. இதில் 4:3 எனும் கோல் கணக்கில் 'யங்ஸ்டார்' அணி வெற்றிபெற்று இறுதிப்போட்டிக்கு நுழைந்தது.

இறுதிப்போட்டி கடந்த 15.12.2007ம் திகதி கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய மைதானத்தில் இடம்பெற்றது. இவ்விறுதிப் போட்டியில் அம்பாறை மாவட்டத்தின் பலம் வாய்ந்த அணிகளுள் ஒன்றான கல்முனை 'பிறிலியண்ட்' அணியினரைச் சந்திக்க நேரிட்டது.

கடும்மழையின் மத்தியில் ஆரம்பமாகிய இறுதிப்போட்டி மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது. 'பிறிலியண்ட்' அணியினர் போட்டி ஆரம்பமாகிய சில நிமிடத்தில் தமக்குக்கிடைத்த பெனால்ட்டி உதைக்கான சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி முதலாவது கோலைப் போட்டார்கள். இதையடுத்து சில நிமிடத்தில் 'யங்ஸ்டார்' அணியினரும் ஒரு கோலைப் போட்டு கோல்கணக்கை சமப்படுத்தி மோதினார்கள். இடைவேளை நெருங்கிய சந்தர்ப்பத்தில் 'பிறிலியண்ட்' அணியினர் இரண்டாவது கோலைப்போட்டார்கள். இதன்படி இடைவேளையின் போது 2:1 எனும் கோல் கணக்கில் 'பிறிலியண்ட்' அணியினர் முன்னணியில் திகழ்ந்தார்கள்.

இடைவேளையின் பின்னர் யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் சிரேஷ்ட வீரர் ஞா. கமலதாசன் அவர்கள் அழகான கோல் ஒன்றைப் போட்டு போட்டியின் கோல்கணக்கை 2:2 எனச் சமப்படுத்தினார்.

இதையடுத்து யார் சாம்பியனாவது என்ற போட்டியில் இரு அணியினரும் தீவிரமாகவும் விறு விறுப்பாகவும் மோதினார்கள்.

இவ்விதம் மிகவும் விறுவிறுப்பாக போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது யங்ஸ்டார் அணியின் முன்களவீரர் பா. சசிகரனுக்கு கோல் போடும் சந்தர்ப்பம் ஒன்று வாய்க்கப்பெற அவ்வாய்ப்பானது 'பிறிலியண்ட்' அணியின் பின்கள வீரரின் முறையற்ற ஆட்டத்தினால் தடுக்கப்பட்டது. இதன் போது மத்தியஸ்தர் பெனால்ட்டி சந்தர்ப்பத்தை யங்ஸ்டாருக்கு வழங்கினார்.



இப்பெனால்டி வாய்ப்பை யங்ஸ்டார் முன்கள வீரர் செ. ஜோண்சன் அழகாக கோலாக்கி யங்ஸ்டாரை 3:2 என்ற கோல் கணக்கில் முன்னிலைப் படுத்தினார்.

இதன் பின்னர் போட்டி மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்றது. வெற்றிக் கிண்ணத்தை மட்டக்களப்பிற்கு கொண்டு செல்வதே குறிக்கோள் என யங்ஸ்டார் அணியினரும், கிண்ணத்தை கல்முனையை விட்டு வெளியே போக விடக்கூடாது என்று பிறிலியண்ட் அணியினரும், மைதானத்தை சூழ்ந்து நின்ற ஆதரவாளர்களும் என மிகவும் விறுவிறுப்பாக போட்டி நடைபெற்றது.

யங்ஸ்டார் கழகத்தின் பின்களத் தடுப்பு வீரர்களின் அபாரமான விளையாட்டினால் பிறிலியண்ட் அணியினரால் கோல் போடும் வாய்ப்புக்களை அதிகரிக்க முடியவில்லை, கிடைத்த கோல் போடும் வாய்ப்புக்களும் யங்ஸ்டாரின் கோல் காப்பாளரது திறமையினால் சாத்தியமற்றதாகின.

இறுதியில் போட்டிக்கான முழுநேரமும் முடிவடைந்த நிலையில் 3:2 என்ற கோல் கணக்கில் கல்முனை 'பிறிலியண்ட்' அணியை வெற்றிகொண்டு மட்டக்களப்பு சீலாமுனை 'யங்ஸ்டார்' விளையாட்டுக் கழகம் மர்ஹூம் M.I.M. இக்பால் ஞாபகார்த்த கிண்ணத்தை கைப்பற்றி சாம்பியனாகியது.

வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சர் ஜனாபா பேரியல் அஷ்ரப் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு, கொட்டும் மழையிலும் பின் வாங்காது விளையாடிய இரு அணியினரதும் விடா முயற்சியினைப் பாராட்டிப் பேசியதுடன், தமிழ் முஸ்லிம் இன ஐக்கியத்தை கட்டியெழுப்புவதற்கான நல்லதோர் வாய்ப்பாக இச்சுற்றுப்போட்டி இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டி, யங்ஸ்டார் அணியினரை வாழ்த்தி வெற்றிக்கிண்ணத்தை வழங்கிவைத்தார்.

### பங்குபற்றிய வீரர்கள் விபரம்

- ★ ப. சுதாகரன் (அணித்தலைவர்)
- ★ ஞா. கமலதாசன் (உபதலைவர்)
- ★ சோ. சிறிசங்கர்
- ★ த. ஜெயக்காந்தன்
- ★ ம. மனோஜிதன்
- ★ ப. போஜராஜன்
- ★ ஜெ. தவசீலன்
- ★ சோ. ஜெயதாஸ்
- ★ செ. ஜோண்சன்
- ★ தே. சுதர்சன் (கோல்காப்பாளர்)
- ★ மோ. குகதாஸ்
- ★ இ. ரஞ்சித்
- ★ பா. சசிகரன்
- ★ ரா. கஜேந்திரன்
- ★ வி. ரவிக்குமார்
- ★ யோ. அன்ரனிதாஸ்
- ★ இ. யோசப் நிசாந்தன்


**இளந்தாரகை**

**சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தச் செய்திமடல்**

**ஆசிரியர்:**
து. கௌரீஸ்வரன்
(செயலாளர், யங்ஸ்டார் வி.க.)

**கணினி வடிவமைப்பு:**
சங்கர்.ரி

**வெளியீடு:**
சீலாமுனை யங்ஸ்டார்
விளையாட்டுக்கழகம்

**தொடர்பு முகவரி:**
273, முகத்துவார வீதி,
சீலாமுனை, மட்டக்களப்பு

**அச்சுப்பதிப்பு:**
வணசிங்கா அச்சகம்,
126/1 திருமலை வீதி, மட்டக்களப்பு.


### இந்த வெற்றி இவர்களுக்குச் சமர்ப்பணம்....

1994ம் ஆண்டு மட்டக்களப்பின் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகமாகவும், மட்டக்களப்பு மாவட்ட காற்பந்தாட்டச் சங்கத்தின் அங்கத்துவத்தினையும் பெற்றுக் கொண்ட எமது கழகம். கடந்த 13 வருட வளர்ச்சிக் காலங்களில் மட்டக்களப்பை விட்டு வெளிமாவட்ட போட்டிகளில் பங்குபற்றியது இதுவே முதல்முறையாகும்.

இளவயது வீரர்களைக் கொண்ட எமது காற்பந்தாட்ட அணி முதன்முதலாகப்பங்குபற்றிய வெளிமாவட்ட போட்டித்தொடரில் வெற்றிபெற்று மட்டக்களப்பிற்கு பெருமை சேர்த்துள்ளது. இந்த வரலாற்று வெற்றியினை எமது கழகத்தினை ஸ்தாபித்து வளர்த்தெடுத்த அனைத்து மனிதர்களுக்கும் சமர்ப்பணம் செய்கின்றோம்.

### நன்றிகள்....


கல்முனையில் இடம்பெற்ற உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் எமது கழகம் பங்குபற்றி மகிழ்ச்சியான அனுபவத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு உதவிய *BDFA, ADFA*, கல்முனை சனிமவுண்ட் வி. கழகம், அம்பாறை மாவட்ட உதைப்பந்தாட்ட நடுவர்கள், எம்முடன் போட்டியிட்ட கழகங்கள், அம்பாறையின் உதைப்பந்தாட்ட ரசிகர்கள், மற்றும் எமது கழகத்தின் ஆதரவாளர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.


## கௌரவம் பெற்ற எமது தலைவர்




கடந்த 16-12-2007ம் திகதி மட்டக்களப்பு மாவட்ட காற்பந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இடம்பெற்றது. இக்கூட்டத்தின் முக்கிய நிகழ்வுகளுள் ஒன்றாக, அம்பாறை மாவட்டத்தில் இடம்பெற்ற காற்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் சாம்பியனாகி மட்டக்களப்பின் காற்பந்தாட்டத்துறைக்கு பெருமைசேர்த்த கழகத்தின் தலைவர் என்பதற்காகவும், கடந்த 13 வருடங்களாக ஓர் காற்பந்தாட்டக்கழகத்தினை வழிநடாத்திவரும் சிறந்த ஆளுமையுள்ள மனிதர் என்ற வகையிலும் எமது விளையாட்டுக் கழகத்தின் தலைவரான திரு. சீ. நவநேசராசா அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். இக்கௌரவத்தினை வழங்கிய மட்டக்களப்பு மாவட்ட காற்பந்தாட்டச் சங்கத்தின் நிருவாகத்தினருக்கு எமது கழகத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

# யங்ஸ்டாரின் வருடாந்த உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி - ஓர் பார்வை




சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக் கழகத்தி னராகிய நாம் எமது கழகத்தின் மறைந்த அங்கத்தவர் களையும், ஆதரவாளர்களையும் நினைவு கூரும் வகையிலும், மட்டக்களப்பின் காற்பந்தாட்டத்தை வளர்க்கும் நோக்கிலும், வருடா வருடம் அணிக்கு ஏழுபேர் பங்குபற்றும் நொக்கவுட் முறையிலான உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியினை சீலாமுனை யில் உள்ள எமது மைதானத்தில் மட்/மாவட்ட காற்பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடனும், மட்/மாவட்ட காற்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் ஆதரவுடனும் மிகவும் சிறப்பாக நடாத்தி வருவது வழமை.



இந்த வகையில் கடந்த 2006ம் ஆண்டிற்கான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டி 2006 மே 20,21ம் திகதிகளில் மிகவும் விமரிசையாக இடம்பெற்றது. இச்சுற்றுப்போட்டியில் மட்டக்களப்பின் பல்வேறு காற்பந்தாட்ட கழகங்கள் பங்கு பற்றின, இதில் இறுதிப்போட்டிவரை முன்னேறி கல்லடி கடல் மீன்கள் அணி முதலாவது இடத்தையும், முகத்துவாரம் லைற் ஹவுஸ் அணி இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டன.

இச்சுற்றுப்போட்டியின் பரிசளிப்பு நிகழ்வில் எமது கழகத்தின் ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவரான ரெட்ணம் பொன்னையா அவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவிக் கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

2007ம் வருடத்திற்கான உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி 2007 மே 05, 06ம் திகதிகளில் சிறப்பாக இடம் பெற்றது இச்சுற்றுப்போட்டியில் சீலாமுனை யங்ஸ்டார் அணி முதலாவது இடத்தினையும், கூழாவடி டிஸ்கோ அணி இரண்டாமிடத்தையும் பெற்றுக்கொண்டன.



யங்ஸ்டார் வி. கழகத்தலைவர் திரு. சீ. நவநேசராசா அவர்களின் தலைமையில் இடம்பெற்ற பரிசளிப்பு நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் திரு. மா. உதயகுமார் அவர்களும், சிறப்பு அதிதிகளாக மட்/ மாவட்ட காற்பந்தாட்டச் சங்கத் தலைவர். திரு. ம. ரூபாகரன் அவர்களும் காற்பந்தாட்டச் சங்க உறுப்பினர் திரு. எஸ். எஸ். குருஸ் அவர்களும் கலந்து கொண்டார்கள்.

இதில் சிறப்பு நிகழ்வாக மட்டக்களப்பின் முதுபெரும் காற்பந்தாட்ட வீரர் திரு. ஜோசப்வின்சன்ற் அவர்களும், எமது கழகத்தின் மூத்த உறுப்பினர் திரு. சி. யோகதாஸ் (மேனன்) அவர்களும் பொன்னாடை போர்த்தப்பட்டும், கௌரவிப்பு உரைகள் வாசிக்கப்பட்டும் கௌரவிக்கப்பட்டார்கள். இத்துடன் தொடர்ச்சியாக மட்டக்களப்பு மாவட்டத் தெரிவு அணியில் முக்கிய வீரராக பங்களித்துவரும் எமது கழகத்தின் உறுப்பினர் ப. சுதாகரன் அவர்களைப் பாராட்டி அவருக்கு சிறப்புப் பரிசும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 2007ல் எமது சுவடுகள்

| | போட்டியின் விபரம் | காலம், இடம் | பெற்ற நிலை |
|---|---|---|---|
| 01. | சீலாமுனை யங்ஸ்டார் வி.கழகத்தின் வருடாந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி (அணிக்கு ஏழுபேர் பங்குபற்றும் நொக்கவுட் சுற்றுப்போட்டி) | 2007 மே 05,06 சீலாமுனை | முதலாமிடம் |
| 02. | BDFA - A பிரிவு லீக் போட்டி | 2007 - மட்டக்களப்பு | அரையிறுதிவரை |
| 03. | B.D.F.A - A பிரிவு நொக்கவுட் சுற்றுப் போட்டி | 2007 - மட்டக்களப்பு | இரண்டாமிடம் |
| 04. | ADFA நடாத்திய மர்ஹூம் M.I.M. இக்பால் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ண நொக்கவுட் சுற்றுப்போட்டி | 09.11.2007 - 15.12.2007 கல்முனை | முதலாமிடம் |

## சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக்கழகம் - தோற்றம், வளர்ச்சி, நோக்கம்

சீலாமுனை யங்ஸ்டார் விளையாட்டுக் கழகம் தன்னுடைய வரலாற்றில் மூன்று தசாப்தங்களைக் கடந்து வந்துள்ளது.

ஆரம்பத்தில் (1977களில்) சீலா முனை, சின்ன உப்போடை மற்றும் இக் கிராமங்களை அண்டியுள்ள பகுதிகளில் வாழ்கின்ற உதைபந்தாட்ட ஆர்வலர் களின் திறமைகளை வெளிப்படுத்து கின்ற உள்ளூர் விளையாட்டுக் கழகமாக விளங்கி வந்துள்ளது.

உள்ளூரில் மிகப் பிரபல்யம் பெற்றிருந்த பாதணி அணியாது, அணிக்கு ஏழுபேர் பங்குபற்றும் உதைப்பந்தாட்டப் போட்டிகளில் முத்திரை குத்திய முன்னணிக் கழகங்களுள் ஒன்றாக எமது கழகம் திகழ்ந்திருக்கின்றது.

இதனால் மட்டக்களப்பு மாவட்ட காற்பந்தாட்டச் சங்கத்தில் அங் கத்துவம் பெற்றிருந்த காற்பந்தாட்டக் கழகங்களுக்கான சிறந்த வீரர்களை உருவாக்கி வழங்கிய உள்ளூர்க்கழ கங்களுள் ஒன்றாகவும் இயங்கி வந்திருக்கின்றது. மட்டக்களப்பின் புனித அந்தோனியார் வி. கழகத்திலும், பாடுமீன் பொழுதுபோக்குக் கழகம் ஆகியவற்றிலும் புகழ் பெற்ற முன்னணி வீரர்களாக விளங்கிய சி. யோகதாஸ், (மேனன்) சி. டேவிட் ஆகியவர்கள் எமது கழகத்தின் ஊடாகவே உரு வாக்கம் பெற்றிருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விதம் எமது கழகம் ஆரம்பமாகியதிலிருந்து சுமார் இரண்டு தசாப்தங்களாக இலங்கை உதை பந்தாட்ட சம்மேளனத்தின் வலைய மைப்பில் உத்தியோகபூர்வமாக இணை யாதிருந்தாலும், மறைமுகமாக கிராம மட்டத்தில் சிறந்த காற்பந்தாட்ட வீரர்களை உருவாக்கும், ஆரம்ப காற்பந்தாட்டப் பாடசாலையாக திகழ்ந்து வந்திருக் கின்றது.

இத்தகைய வரலாற்றுப் பின்புலத்தில் எமது கழகத்தின் தலைவர், சீ. நவநேசராசா அவர்களின் முயற்சியால் 1994ம் வருடம் எமது கழகம் இலங்கை விளையாட்டு அமைச்சின் கீழும், மட்டக்களப்பு காற்பந்தாட்டச் சங்கத்திலும் உத்தியோக பூர்வமாக இணைந்து கொண்டது.

மட்டக்களப்பு காற்பந்தாட்டச் சங்கத்தின் B பிரிவு கழகங்களுள் ஒன்றாக இருந்த நாம் பின்னர் திறமை அடிப்படையில் A பிரிவு கழகங்களுள் ஒன்றாக முன்னேறி இன்றுவரை மட்டக்களப்பின் A பிரிவு காற்பந்தாட்டக் கழகமாக விளங்கி வருகின்றோம்.

மனிதர்களின் கூட்டு வாழ்வு சிதைக்கப்பட்டு சுயநல நோக்கிலான தனிமனித வாழ்வு பிரதானப்படுத்தப்படும் இன்றைய காலகட்டத்தில், மனிதர்கள் சமூகமாக ஒன்றிணைந்து கூட்டாகச் செயற்படுவதற்கான, கூட்டாக வாழ்வதற் கான வாய்ப்புக்களை வழங்கும் துறைகளுள் ஒன்றாக நமது சூழலில் (எமது கிராமத்தில்) காற்பந்தாட்டம் திகழ்ந்து வருகின்றது.

இளைய தலைமுறையினர் ஒன்று கூடி வாழ்வதற்கும், உடல், உள ரீதியில் ஆரோக்கியமுள்ள நற்பிரசை களாக வளர்வதற்கும், இவர்கள் சமூக நலப் பார்வை உள்ள ஆக்கபூர்வமான மனிதர்களாக உருவாகுவதற்குமான வாய்ப்புக்களை இவ்விளையாட்டு நிறையவே வழங்கி வருகின்றது.

காற்பந்தாட்டத்தின் மூலம் கிடைக்கும் இத்தகைய சாதகமான பயன்களைப் பெற்றுக்கொள்ளுவதே எமது கழகத்தின் நோக்கமாக இருந்து வருகின்றது.

### கல்முனையில் வெற்றி பெற்ற சீலாமுனை யங்ஸ்டார் வீரர்கள்

